# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## *2013 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கச்) சட்டம்*

*(2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2013, யூலை மாதம் 12 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கச்) சட்டம்**

[*2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஒ. 3/2012*

***2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற்சபை (நீக்கச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்*

*2002ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்தல்.*

***2.*** *இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபைச் சட்டம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.*

*பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை நிதியம் மற்றும் பலவற்றின் பணங்கள் திரட்டு நிதியத்திற்குக் கைமாற்றப் படுதல்.*

***3.*** *(1) இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முன்னரான நாளன்று பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை நிதியத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து திரட்டு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருப்பதும் பாராளுமன்ற புலமைப்பரிசிற் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் கொள்வனவுசெய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதற்கு குத்தகைக்கு விடப்பட்ட அல்லது அதன் கையாளுகையில் இடப்பட்ட அல்லது அத்தகைய சபையின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அத்தகைய ஆதனத்துடன் இணைந்துள்ள எவையேனும் நியதி நிபந்தனைகளுக்கமைய இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து பாராளுமன்றத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதாக அல்லது கொள்ளப்பட்டதாக அல்லது குத்தகைக்கு விடப்பட்டதாக அல்லது அதன் கையாளுகையில் இடப்பட்டதாக அல்லது அதன் உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***4.*** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்